மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருக்கு இந்த நேரத்திலே நான் திடடவட்டமாக வாக்குறுதி அளிக்கிறேன். இன்னும் ஓராண்டுக்குள்ளே, ரூ. 24 இலட்சம் மதிப்புள்ள ஆஸ்பத்திரி புதிதாக வரவில்லை யானாலும்கூட, இப்பொழுது இருக்கிற முனிசிப்பல் ஆஸ்பத்திரியை நல்லமுறையிலே விரிவுபடுத்தி, அங்கே 24 பெட்கள் கொண்ட ஒரு எக்ஸ்டென்ஷன் சென்ட்டர் நிச்சயமாக அமைக்கப்படும். இந்தச் செய்தி, மாண்புமிகு உறுப்பினர் சேதுராமன் அவர்களுக்கு ஓரளவுக்குத் திருப்தி அளிக்கும் என்று நான் கருதுகிறேன்.

### புயல் பாதுகாப்பு இல்லங்கள்.

* குறுகிய கால வினா எண் : 55—திரு. எம். எஸ். மாணிக்கம் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், வேதாரண்யம் வட்டம், புட்பவனம் பஞ்சநதிக்குளம், நடுச்சேத்தி ஆகிய கிராமங்களில் புயல் பாதுகாப்பு இல்லங்கள் கட்டப்பட்டு வருகின்றனவா ?

(ஆ) ஆம் எனில், இவைகளுக்கு செல்ல அணுகு சாலைகள் இல்லாமல் இருப்பதால் அவைகளை அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அவைகளின் மதிப்பீடு என்ன ?

(ஈ) அவை எப்போது முடியும் ?

(முற்பகல் 9-50)

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே தஞ்சை மாவட்டத்திலே கட்டப்படுகின்ற புயல் பாதுகாப்பு இல்லங்களுக்கு போக்குவரத்து வசதி சரியில்லை என்பதாலும் சாமான்களை கொண்டு போவதற்கு முடியாமல் போகிறது என்பதாலும், முதலமைச்சர் நிதியில் இருந்து 2,20,000 வழங்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எம். எஸ். மாணிக்கம் : பேரவைத் தலைவர் அவர்களே இந்த இரண்டு இடங்களில் கட்டப்படுகிற புயல் பாதுகாப்பு இல்லங்களைத் தவிர, புதிதாக வேறு இடங்களில் கட்டப்படுகிற அந்த இல்லங்களுக்கு அணுகு சாலை வசதிகள் இல்லாமல் இருக்கின்றன. அந்தப் பகுதிகளுக்கு சாலை வசதிகள் செய்து கொடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, மொத்தம் 82 புயல் பாதுகாப்பு இல்லங்கள் கட்டப்படுகின்றன. அங்கே அணுகு வசதி இல்லாமல் போனால் கட்டவே முடியாது. சாமான்கள் எல்லாம் அந்த இடங்களுக்கு போக வேண்டும். போக்குவரத்து வசதி ஏற்படுத்தப்படுகிறது. அப்படி இல்லாத இடங்களில் போக்குவரத்து ஏற்பாடுகளைச் செய்ய அரசு முன்வரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே அடிக்கடி புயல் வீசும் என்பது உறுதியாகத் தெரிகிறது. அதனைக் கருத்தில் கொண்டு நாம் அந்தப் புயலிலிருந்து மக்களைப் பாதுகாக்க தமிழகத்தில் இருக்கிற கடற்கரை நெடுகிலும், அரசாங்கமே முன் வந்து முயற்சி எடுத்து மேலும் புயல் பாதுகாப்பு இல்லங்களை நிரம்பக் கட்டுவதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, நீண்ட காலமாக புயல் வீசிக்கொண்டு இருந்தது. அப்போதெல்லாம் புயல் பாதுகாப்பு இல்லங்கள் கட்டப்படவில்லை. இந்த அரசு வந்தவுடன்தான் 82 இடங்களில் கட்டிக்கொண்டு இருக்கிறோம். எங்கெங்கு தேவையோ அங்கங்கு மக்கள் பாதுகாப்புக்காக கட்டப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். எஸ். மாணிக்கம் : தலைவர் அவர்களே, புயல் பாதுகாப்பு இல்லம் ஒன்று வெள்ளப் பள்ளம் என்ற பகுதியிலே கட்டப்பட்டிருக்கிறது. ஆனால் அணுகு சாலை இல்லாததால் அதை 2 மைல் தள்ளி ரோட்டு ஓரத்தில் கட்டியிருக்கிறார்கள். எனவே இந்த இடத்தில் உள்ள புயல் பாதுகாப்பு இல்லத்திற்கு அணுகு சாலை அமைத்துத்தர அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, அரசு முன்வரும்.

திரு. ந. சிவஞானம் : தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் அடிக்கடி புயல் வருவதால் கடற்கரை சாலையில் இல்லாத இடங்களுக்கும், தஞ்சை மாவட்டத்திலுள்ள உட்பகுதிகளுக்கும் அங்கே உள்ள கிராமங்களுக்கும் இதுபோன்ற இல்லங்கள் அமைத்துத்தர அரசு முன் வருமா என்பதை தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, உட் பகுதியில் சில இடங்களில் வீடுகள், மாடிகள், பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. அவைகளிலே மக்களைத் தங்க வைத்துக் கொள்ளலாம். ஆனால் கடற்கரைப் பகுதியிலே உள்ளவர்களுக்கு அதை விட அதிகம் தேவைப்படுவதால் முதலிலே கடற்கரைகளில் உள்ளவர்களுக்குக் கட்டிக் கொடுக்கப்படும்.

1980 ஆகஸ்ட் 1]

திரு. நா. சுந்தரராஜ்: தலைவர் அவர்களே, இந்தப் புயல் பாதுகாப்பு இல்லங்கள் கட்டப்படுவது எந்த நிதியில் இருந்து கட்டப்படுகிறது. கேர் நிறுவனம் தரக்கூடிய தொகையில் இருந்து முழுமையாக கட்டப்படுகிறதா? அதில் அரசின் பங்குத் தொகை ஏதாவது இருக்கிறதா? என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, பல நிறுவனங்கள் நிதி அளிக்கின்றன. அது போதவில்லை என்றால் முதல் அமைச்சர் அவர்களின் நிதியிலிருந்தும் எடுக்கப் படுகிறது. பெரும்பாலும் பாதி நிதி நிறுவனங்களில் இருந்தும் பாதி நிதி முதலமைச்சர் நிதியிலிருந்தும் கட்டப்படுகிறது.

திரு. சு. முத்துக்கிருஷ்ணன்: பேரவைத் தலைவர் அவர்களே, புயலடிக்கின்ற நேரங்களில் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள பகுதிகளிலும் பாதிப்பு ஏற்படுகிற காரணத்தால், அங்கேயும் புயல் பாதுகாப்பு இல்லங்கள் கட்டுவதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, எங்கெங்கே புயல் அடித்து அதனால் சேதம் விளைகின்ற நிலைமை ஏற்படுகிறதோ அங்கெல்லாம் கட்டுவதற்கு அரசு முயற்சி எடுத்துள்ளது.

திரு. இரா. தாமரைக்கனி: தலைவர் அவர்களே, ஒரு ஊரில் 10,000 மக்கள் புயல் ஏற்படுகின்ற நேரத்தில் பாதிப்புக்குள்ளாவதால் அத்தனை மக்களும் அந்த இல்லங்களில் சென்று தங்க வசதி உள்ளதா? அதற்கான வசதிகளை அரசு செய்து தருமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, புயல் பாதுகாப்பு இல்லங்கள் இப்போது 'ரவுண்டாக' 'சர்க்குலராக' கட்டப்படுகிறது. அதற்கு 4 புறமும் வாயிற்படி அமைக்கப்பட்டு இருக்கிறது. அந்த இல்லத்தின் கீழ்பகுதியில் 500 மக்களும், மேலே 500 மக்களும் தங்க முடியும் என்கிற அளவிற்கு இப்போது கட்டப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## அரசினர் மருத்துவமனை, உதகமண்டலம்.

* குறுகிய கால வினா எண். 56—திரு.கே. உச்சி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், உதகமண்டலம் அரசினர் மருத்துவமனையில் போதுமான அளவில் டாக்டர்கள் இல்லை என்பது அரசுக்குத் தெரியுமா?